பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தினகரன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. டிடிவி தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டப் பேரவை விதி எண் 55-ன்கீழ் ஒரு மனுவை உங்களிடம் தாக்கல் செய்திருந்தேன். அந்த விவரத்தை மாத்திரம் இங்கே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிப்பதற்காக உங்களிடம் அனுமதி கேட்கிறேன்.*

@@ 678 முதல் 781 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2018 மே 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. தாங்கள் கொடுத்திருக்கின்ற அந்த அறிவிப்பு துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பதில் வந்தவுடன் agenda-வில் சேர்க்கப்படும் விவரங்கள் பற்றி உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, அது சம்பந்தமான ஒரு கோரிக்கையை இந்த. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் agenda—விற்கு போய்விட்டேன். (குறுக்கீடு) விவாதத்திற்குப் போய்விட்டேன். நீங்கள் zero hour-ல் raise செய்திருந்தால்கூட பரவாயில்லை. நீங்கள் கொடுத்த அறிவிப்பு ஆய்வில் இருக்கிறது. உறுதியாக அதுபற்றிய நடவடிக்கை வரும்.

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் கொடுத்தீர்களென்றால் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கோரிக்கையை வைத்துவிடுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அப்படியெல்லாம் சொல்ல முடியாது. அது முறையும் அல்ல.

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் zero hour-ல் எடுப்பீர்கள் என்றுதான் காத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour முடிந்து நிறைய நேரம் ஆகிவிட்டது. Zero hour முடிந்து, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசி. . . .

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் zero hour என்று சொல்லவில்லை. அதனால்தான் நான் காத்துக்கொண்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour என்று எப்பொழுதும் சொல்வதில்லை. கேள்வி நேரம் முடிந்தவுடன் Zero hour ஆரம்பித்துவிடும்.

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் நான் அதுமாதிரி raise செய்கிறேன். நான் புதிய உறுப்பினர் என்பதால், Parliament-ல் இருப்பதுபோன்று காத்திருந்தேன்.

[2018 மே 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, Zero hour என்றால், கேள்வி நேரம் முடிந்தவுடன், உடனடியாக Zero hour அமலுக்கு வரும். யாரும் எதுவும் கேட்கவில்லையென்று சொன்னால், agenda-விற்குள் நான் போய்விடுவேன்.

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுவைத் தாக்கல் செய்திருந்ததால், நான் காத்துக்கொண்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றும் problem இல்லை. நீங்கள் கொடுத்த அறிக்கை ஆய்வில் இருக்கிறது. நடவடிக்கைகள் எடுத்தவுடன், உறுதியாக அதுகுறித்து விவரம் தெரிவிக்கப்படும். இனி நீங்கள் கேள்வி நேரம் முடிந்தவுடன், Zero hour-ல் ஏதாவது பேச வேண்டுமென்றால் கேட்கலாம்.

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் ஒன்றும் controversy ஆக எதுவும் இல்லை. கோரிக்கைதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, எந்தக் கோரிக்கையாக இருந்தாலும். . .

திரு. டிடிவி தினகரன்: 94,000 பேர், ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் சார்பாகத்தான் ஒரு கோரிக்கையை, ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் இந்த நேரத்தில் நான் allow செய்ய முடியாது. நீங்கள் Zero hour-ல் raise செய்யுங்கள். நான் அனுமதி கொடுக்கிறேன்.

திரு. டிடிவி தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புதிய உறுப்பினர்; Parliament மாதிரி Zero hour வரும் என்று காத்திருந்துவிட்டேன். வேறொன்றுமில்லை. அந்தக் கோரிக்கையை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

2018 மே 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் விதி 55-ன்கீழ் கொடுத்துள்ள அறிவிப்பு குறித்து துறையிலிருந்து பதில் வந்தவுடன், உறுதியாக நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கு நான் முயற்சி செய்கிறேன். நீங்கள்* Zero hour-ல் *இனிமேல்* raise *செய்யுங்கள்.*

திரு. டிடிவி தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Zero hour-ல் *இனிமேல்* raise *செய்துவிடுகிறேன். இன்று ஒரு நாள் நான் புதிய உறுப்பினர் என்பதால் வாய்ப்புத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை; மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக. . .*

திரு. டிடிவி தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள், நான்* controversy *ஆக பேசவில்லை. அந்த 94,000. . . .*

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நான்* agenda-*விற்குள் போய்விட்டேன். மாண்புமிகு அமைச்சர்கள் மானியக் கோரிக்கைகளை* move *செய்துவிட்டார்கள். அடுத்து உறுப்பினர்களைப் பேசுவதற்கு அழைக்க உள்ளேன். நீங்கள் அப்படி ஏதாவது பேச வேண்டுமென்று நினைத்தீர்கள் என்றால், விவாதம் எல்லாம் முடிந்தபிறகு, ஏதாவது விளக்கம் கேட்டீர்கள் என்றால், நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) அப்போது விளக்கம் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் உங்களுக்கு பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) நான் நிகழ்ச்சி நிரலுக்குள் போனதற்குப் பின்னால், இப்போது நீங்கள்* raise *செய்வது முன் மாதிரியில்லை; அது முறையும் அல்ல. மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமெல்லாம் முடிந்து, மாண்புமிகு அமைச்சர்கள் தங்களது பதிலுரையை முடித்தபிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வியைக் கேட்கலாம். நான் அதற்கு அனுமதி தருகிறேன். அப்போது நீங்கள் கேள்விகள் கேட்கலாம். அதுவரை நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள்; அமருங்கள்.*